# விசேட தேவையுடைய மாணவர்களின் கற்றலில் ஆசிரியர்களின் வகிபாகம்

**ந. கோவேந்தன், ராஜேந்திரன் தக்ஷாயினி**
கல்வி மற்றும் பிள்ளை நலத்துறை,
கலை கலாசார பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.
koventhannadarasa@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

இவ்வாய்வானது விசேட தேவையுடைய மாணவர்கள் கற்றலில் எதிர்நோக்கும் பிரச்சினைகளை இனங்காண்பதுடன் அவர்களது கற்றலில் ஆசிரியர்களின் வகிபங்கினை ஆராய்தல் எனும் நோக்கத்தின் அடிப்படையில் மட்டக்களப்பு மேற்கு மற்றும் கல்குடா கல்வி வலயங்களில் உள்ள விசேட கல்வி அலகுகளை அடிப்படையாகக் கொண்ட அளவை நிலை ஆய்வாக அமைந்தது. இவ்வலயங்களில் உள்ள விசேட தேவையுடைய மாணவர்களுக்கான விசேட அலகுகளைக் கொண்ட 09 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டன. 09 பாடசாலைகளிலும் இருந்து 09 அதிபர்களும், விசேட தேவையுடைய மாணவர்களுக்கு கற்பிக்கும் 20 ஆசிரியர்களும், இவ்விரண்டு வலயங்களிலும் உள்ள விசேட கல்விக்கு பொறுப்பான 02 சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்களும், விசேட தேவையுடைய 90 மாணவர்களும், இம்மாணவர்களின் பெற்றோர்கள் 90 பேரும் நோக்க மாதிரியின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டு வினாக்கொத்து, அவதானம், நேர்முகங்காணல் போன்ற ஆய்வு கருவிகள் மூலம் தரவுகள் பெறப்பட்டு அவை ஆய்வு நோக்கத்தின் அடிப்படையில் பண்பு ரீதியானதும், அளவு ரீதியானதுமான கலப்பு முறையில் பகுப்பாய்வு செய்யப்பட்டு தரவுகள் MS EXCEL மூலம் உருக்கள், அட்டவணைகளாக வகை குறித்துக்காட்டப்பட்டுள்ளன. அதன் இந்த கலப்பு முறை பகுப்பாய்வின் அடிப்படையில் விசேட தேவையுடைய மாணவர்களின் கற்றலில் ஆசிரியர்களின் வகிபாகம் குறைவதற்கான காரணங்களாக போதிய பயிற்சி குறைவு, வளங்கள் குறைவாக காணப்படுகின்றமை, ஆசிரியர்கள் வாண்மைத்துவத்தை விருத்தி செய்யாமை, இம்மாணவர்களின் பெற்றோர் ஆசிரியர்களின் கற்றல், கற்பித்தலுக்கு போதிய பங்களிப்பு வழங்காமை, ஆசிரியர்கள் தூர பிரதேசங்களில் இருந்து பணிக்கு வருகின்றமை, பெற்றோர் பிள்ளைகளை தொடர்ச்சியாக பாடசாலைக்கு அனுப்பாமை, ஆசிரியர் மாணவர் விகிதம் முறையாக பின்பற்றப்படாமை போன்ற பல காரணங்களால் இம்மாணவர்களின் கற்றலில் ஆசிரியர்களின் வகிபாகம் குறைகின்றமை பிரச்சினைகளாக பெறப்பட்டுள்ளன. இதற்கான தீர்வுகளாக அதிபர்கள் ஆசிரியர்களுக்கு தகுந்த ஆலோசனைகள் வழங்குதல், ஆசிரியர்கள் விசேட கல்வி தொடர்பான கற்கை நெறிகளை தொடர்வதற்கு அதிபர் ஒத்துழைப்பு வழங்குதல், விசேட தேவைக் கல்வியுடன் தொடர்புபட்ட பல்கலைக்கழக விரிவுரையாளர்களை அழைத்து ஆசிரியர்களுக்கு செயலமர்வுகள் நடாத்துதல், கல்வி அமைச்சு வலய மட்டத்தில் இவ்ஆசிரியர்களுக்கு பயிற்சி நெறிகளை வழங்குதல், அதிபர் இம்மாணவர்களின் கற்றல், கற்பித்தல் தொடர்பில் பெற்றோருக்கு தகுந்த ஆலோசனைகளை வழங்கி ஆசிரியர்களுடன் ஒத்துழைப்புடன் செயற்பட வைத்தல், விசேட தேவை அலகுகளில் கல்விசாரா ஊழியர்களை நியமித்தல், இவ்ஆசிரியர்களுக்கு உதவி ஆசிரியர்களை நியமித்தல், கல்வி அமைச்சின் 37/2020 சுற்றறிக்கையின் படி விசேட அலகுகளில் ஆசிரியர் மாணவர் விகிதாசாரம் 1:5 என கணக்கிட்டு தேவையான மீதி ஆசிரியர்களை வழங்க வேண்டும். மற்றும் மாணவர்களின் வீட்டிற்கு செல்லும் ஆசிரியர்களின் பொருத்தமான எண்ணிக்கையை கணக்கிடும்போது ஆசிரியர் மாணவர் விகிதம் 1:3 ஆக இருத்தல் வேண்டும், அதிபர் தொடர்ச்சியாக மேற்பார்வை செய்து வளங்களை பெற்றுக்கொடுத்தல், ஆசிரிய ஆலோசகர் மேற்பார்வை செய்தல் போன்ற செயற்பாடுகள் விதந்துரைக்கப்பட்டுள்ளது.

***திறவுச் சொற்கள்:*** *விசேட தேவைக் கல்வி, கற்றல், கற்பித்தல், வகிபாகம், ஆசிரியர்*

**அறிமுகம்**

"விசேட தேவையுடைய மாணவர்களின் கற்றலில் ஆசிரியர்களின் வகிபாகம்" என்ற தலைப்பில் மட்டக்களப்பு மேற்கு மற்றும் கல்குடா கல்வி வலயங்களை அடிப்படையாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. பொதுவாக சாதாரண மாணவர்களுக்கு தேவைப்படாத விசேட கவனம் மற்றும் குறிப்பிட்ட தேவைகள் அவசியமாக இருக்கும் மாணவர்களை விசேட தேவையுடைய மாணவர்கள் என்பர் (Ebony Howard, 2021). விசேட கல்வித் தேவைகள் என்பது சட்டபூர்வ வரையறை மற்றும் கற்றல் சிக்கல்கள் அல்லது குறைபாடுகள் உள்ள பிள்ளைகளைக் குறிக்கின்றது.

பிள்ளைகள் ஒரே தன்மையான ஆற்றல், அறிவுடையவர்களாக இருப்பதில்லை. ஒவ்வொரு மாணவரும் பல்வேறுபட்ட கற்றல் தேவையுடையவர்களாக காணப்படுவார்கள். இவர்கள் அனைவரையும் சீரான வழியில் நெறிப்படுத்துவது ஆசிரியரின் பொறுப்பாகும். வகுப்பறையில் மீத்திறன் உடைய மாணவர்கள், மெல்லக் கற்கும் மாணவர்கள், கற்றல் இடர்பாடுடைய மாணவர்கள் வலது குறைந்தோர் எனப் பல வகையான மாணவர்கள் காணப்படுவார்கள். இவர்களின் கற்றல் பாங்கு, ஆற்றல், திறன் போன்றன ஒவ்வொருவருக்கும் வித்தியாசமானதாகும். இவர்கள் கற்றுக் கொள்வதில் வித்தியாசமான கற்றல் தேவையுடையவர்களாக காணப்படுவார்கள் (Anas and Nawastheen, 2019).

மட்டக்களப்பு மேற்கு மற்றும் கல்குடா கல்வி வலயங்களில் விசேட தேவையுடைய மாணவர்களுக்கான அலகுகளில் செவிப்புல குறைபாடுடைய பிள்ளைகள், கற்றல் இயலாமையுடைய பிள்ளைகள், மொழி பேச்சுக் குறைபாடுடைய பிள்ளைகள், உடல் குறைபாடுடைய பிள்ளைகள் எனப் பல விசேட தேவையுடைய மாணவர்கள் காணப்படுகின்றனர்.

கற்றல் என்பது அறிவு, சிந்தனைத்திறன் மற்றும் நடத்தைகளில் ஏற்படுகின்ற மாற்றத்தினைக் குறிக்கின்றது. சமூக அறிகைவாதிகளின் கருத்தின் படி கற்றலுக்கான அடிப்படையாக நடத்தையில் ஏற்படுகின்ற மாற்றத்தினைக் குறிப்பிடலாம். விசேட தேவையுடைய மாணவர்கள் கற்றலில் ஈடுபடுகின்ற போது பல பிரச்சினைகளைத் எதிர்கொள்கின்றனர். இப்பிரச்சினைகளை தீர்த்து இம்மாணவர்களுக்கும் கல்வியில் சமவாய்ப்பை ஏற்படுத்த ஆசிரியர்களின் பங்கு மிக முக்கியம் பெறுகின்றது.

மேற்கூறிய கற்பித்தல் முறைகளை இம்மாணவர்களின் தனியாள் வேறுபாடுகளுக்கு ஏற்ப கற்பித்ததன் பின்னர் இம்மாணவர்கள் பயன் பெற்றுள்ளனரா? என்பதை ஆசிரியர் மதிப்பீடு செய்தல் வேண்டும். இக்கற்பித்தல் முறைகள் மூலம் மாணவர்கள் பயன்பெறாமல் யாராவது விடுபட்டிருப்பின் அவர்களை இனங்கண்டு பரிகார கற்பித்தல் முறைகளை மேற்கொள்ள வேண்டும். இவ்வாறன கற்பித்தல் முறைகளையும், பரிகார கற்பித்தல் முறைகளையும் மேற்கொள்வதற்கு ஆசிரியர் போதிய பயிற்சிகளைப் பெற்றிருக்க வேண்டும்.

விசேட தேவையுடைய மாணவர்களின் கற்றலில் ஆசிரியரின் வகிபாகமே மிக அதிகமாக காணப்பட வேண்டும். மட்டக்களப்பு மேற்கு மற்றும் கல்குடா கல்வி வலயங்களை அடிப்படையாகக் கொண்டு விசேட தேவையுடைய அலகுகளில் உள்ள மாணவர்கள் தமது

கற்றலில் எதிர்நோக்கும் பிரச்சினைகளை இனங்காண்பதுடன் அவர்களது கற்றலில் ஆரியர்களின் வகிபங்கினை ஆராய்தல் எனும் நோக்கத்தின் அடிப்படையில் இவ்வாய்வு இடம்பெற்றது.

**ஆய்விற்கான பின்னணி / நியாயத்துவம்**

விசேட தேவையுடைய மாணவர்களுக்கான கல்வி வாய்ப்பினை வழங்குவதில் பிரதானமாக விளங்குபவர்கள் ஆசிரியர்களாவர். மாற்றங்களை ஏற்படுத்தக் கூடிய காரணிகளில் உள்ள இடர்களை நீக்கி கற்றலை விரைவுபடுத்துவதில் ஆசிரியர்களின் பங்கு இன்றியமையாதது. என்பதை வாட்சன், மாக்ரட்மீட் போன்ற சூழ்நிலைவாதிகளின் ஆய்வு முடிவுகள் எடுத்துக்கூறுகின்றன.

Mohaned Ghazi Abed என்பவர் 2018 இல் விசேட தேவையுடைய மாணவர்களின் கல்வியில் ஆசிரியர்களின் பணி என்னும் தலைப்பில் சவுதி அரேபியாவில் செய்த ஆய்வில் பாடத்திட்ட வழிகாட்டி, பயிற்சிப் பொருட்கள் மற்றும் பாடசாலை வசதிகள் சிறப்பாக இல்லாத காரணத்தினால் அம்மாணவர்கள் கல்வியை தொடர்வதில் சிரமப்படுகின்றனர் என குறிப்பிடுகிறார்.

மேற்கூறிய ஆய்வு முடிவுகள் ஆய்வாளனின் ஆய்வுப்பிரதேசங்களான மட்டக்களப்பு மேற்கு மற்றும் கல்குடா கல்வி வலயங்களில் விசேட தேவையுடைய அலகுகளில் உள்ள மாணவர்களின் கற்றலுக்கு ஆசிரியர்களின் கற்பித்தல் செயன்முறை வலுச்சேர்க்கின்றதா? என்பதை அறிவதற்காக இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மேற்கு மற்றும் கல்குடா கல்வி வலயங்களில் உள்ள ஆசிரியர்களிடம் விசேட தேவையுடைய மாணவர்கள் பற்றிய விளக்கம் இருந்த போதும் அம்மாணவர்களுக்கான பரிகார நடவடிக்கைகளை முறையாக மேற்கொள்ளாத நிலையை அவதானிக்க முடிகிறது. அத்துடன் பாடசாலைகளில் சகல செயற்பாடுகளிலும் இவ்வகை மாணவர்களுக்குரிய இடம் வழங்கப்படுகிறதா? என்பதும் ஆய்வுக்குரிய விடயமாகவே உள்ளது. ஒவ்வொரு மாணவரதும் அடிப்படை கல்வி உரிமையை உறுதிப்படுத்துவது அனைவரதும் கடமையாகும்.

இன்றைய நிலையில் மட்டக்களப்பு மேற்கு மற்றும் கல்குடா கல்வி வலயங்களில் உள்ள பாடசாலைகளில் விசேட தேவையுடைய மாணவர்களுக்கான அலகுகளை உள்ளடக்கிய பாடசாலைகளும், உள்ளடங்கல் கல்வி என்ற அடிப்படையில் சாதாரண வகுப்பறைகளில் எல்லா மாணவர்களுடனும் இணைத்து கற்றல், கற்பித்தல் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற போதிலும் விசேட தேவையுடைய அலகுகளில் உள்ள மாணவர்களுக்கான கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் திருப்திகரமானதாக இல்லாத ஒரு நிலையை அவதானிக்கலாம். இதற்கு மிக முக்கிய காரணம் ஆசிரியர்களது வகிபங்கானது மிகவும் குறைந்த மட்டத்திலேயே காணப்படுகிறது. இவ்வாறான காரணங்களின் அடிப்படையிலேயே விசேட தேவையுடைய மாணவர்களின் கற்றலில் ஆசிரியர்களின் வகிபங்கை அறிவதற்காக மட்டக்களப்பு மேற்கு மற்றும் கல்குடா கல்வி வலயங்களில் உள்ள

தெரிவு செய்யப்பட்ட விசேட தேவையுடைய மாணவர்களுக்கான அலகுகளைக் கொண்ட 09 பாடசாலைகள் ஆய்வுக்காக எடுத்துக் கொள்ளப்பட்டன.

**ஆய்வுப் பிரச்சினை**

கல்வித்துறையில் கருத்தியல் மற்றும் செயற்பாட்டு அடிப்படையில் ஏற்பட்டுவரும் மாற்றங்களினாலும் கல்வி ஓர் அடிப்படை உரிமை என்ற வகையில் அதில் ஆழமான பார்வையும், நோக்கும் இடம்பெற்று வருகின்றன. அந்த வகையில் விசேட தேவைகள் சார் எண்ணக்கரு இன்று முதன்மை பெறும் ஓர் அம்சமாக வளர்ச்சி அடைந்துள்ளது. கல்வி ஓர் அடிப்படை உரிமையாகையால் எக்காரணம் கொண்டும் ஒருவரது கல்வி உரிமையை மறுதலிக்க முடியாது. உடல், உள ரீதியில் இயலாமை கொண்டவர்களாக காணப்பட்டாலும் அவர்களும் கல்வியை பெறுவதற்கான உரிமையுடையவர்கள் என்ற எண்ணக்கருவுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வருகின்றது. ஆனால் இந்த விடயம் பற்றி ஆய்வாளனின் ஆய்வு பிரதேசத்தில் விசேட தேவையுடைய மாணவர்களுக்கு கற்பிக்கும் ஆசிரியர்களில் ஒரு சிலர் விசேட தேவைகள் கல்வி தொடர்பான கற்கை நெறிகளை தொடராதவர்களாக உள்ளனர். இதனால் இம்மாணவர்களுக்கு சிறப்பாக கற்றல், கற்பித்தல் செயற்பாட்டினை மேற்கொள்வது குறைவாகவே உள்ளது.

மட்டக்களப்பு மேற்கு மற்றும் கல்குடா கல்வி வலயங்களில் விசேட தேவையுடைய மாணவர்கள் கற்பதற்கான விசேட அலகுகள் 09 உருவாக்கப்பட்டுள்ள போதிலும் இம்மாணவர்களுக்கான விசேட தேர்ச்சி பெற்ற ஆசிரியர்களும் மிக குறைவாகவே காணப்படுகின்றனர். இது இம்மாணவர்களின் எதிர்கால வாழ்க்கையை கேள்விக் குறியாக்கும் ஒரு விடயமாகும்.

இவ்வகை மாணவர்கள் கற்றலை தொடர்ச்சியாக மேற்கொள்வதில் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். இதில் பெற்றோரின் ஈடுபாடு குறைவு, இம்மாணவர்களுக்கு பொருத்தமான கற்றல் உபகரணங்கள் இல்லாமை, சமூகம் இவ்வாறான மாணவர்களை ஏற்றுக்கொள்வது குறைவாக உள்ளமை மிக முக்கியமான பிரச்சினைகளாகும்.

ஆசிரியர்கள் குறைவாக உள்ளமையினால் குறித்த பாடசாலைகளில் தனியாள் வேறுபாடுகளுக்கேற்ப கற்றல், கற்பித்தல் செயற்பாட்டை முன்னெடுப்பதில் சிக்கல் நிலை உள்ளது. இன்றைய நிலையில் விசேட தேவையுடைய மாணவர்களின் சிறந்த வகுப்பறைக் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளுக்கு வகுப்பறை முகாமைத்துவம் சரியானதாக இல்லை. இம் மாணவர்களுக்கு கற்பிக்கும் ஆசிரியர்கள் ஒரு சிலர் விசேட தேவைக் கல்வி தொடர்பான கற்கை நெறிகளை கற்காமலே கற்பிக்கின்றனர். இதனால் விசேட தேவையுடைய மாணவர்களை எவ்வாறு கையாள்வது என்பது பற்றிய விளக்கம் இன்மையால் சாதாரண மாணவர்களுக்கு கற்பிப்பது போன்றே கற்பிக்கின்றனர். இதனால் இம் மாணவர்கள் கற்றலில் முன்னேறுவது குறைவாக உள்ளது.

மேலும் மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்தில் உள்ள 4 விசேட தேவையுடைய மாணவர்களுக்கான அலகுகளுக்கும் விசேட தேவையுடைய கற்கைநெறிகளை பூர்த்தி செய்த நிரந்தர நியமணம் பெற்ற 4 ஆசிரியர்களே உள்ளனர். ஒரு விசேட தேவையுடைய

அலகுக்கு ஓர் ஆசிரியர் என்பதன்படி நியமிக்கப்பட்டுள்ளதால் குறித்த ஆசிரியர் பாடசாலைக்கு வருகை தராவிட்டால் வேறு ஆசிரியர்கள் கற்பிப்பது அல்லது இம்மாணவர்கள் பாடசாலை நேரம் முடிய மட்டும் கற்றல், கற்பித்தல் செயற்பாட்டின் பயன்களை அனுபவிக்காமலே வீடு செல்கின்றனர்.

இந்த வகையில் மட்டக்களப்பு மேற்கு மற்றும் கல்குடா கல்வி வலயங்களில் விசேட தேவைகள் சார் அலகுகள் ஊடாக கல்வியை வழங்கும் பாடசாலைகளில் இம்மாணவர்களுக்கு கற்பிக்கும் ஆசிரியர்கள் மாணவர்களின் கற்றல் தொடர்பாக என்ன நிலைப்பாட்டைக் கொண்டுள்ளார்கள் என்பதை அறிந்து பரிகார நடவடிக்கைகளை மேற்கொள்வது முக்கியமானதாகும்.

**ஆய்வுப் பிரச்சினைக் கூற்று**

மட்டக்களப்பு மேற்கு மற்றும் கல்குடா கல்வி வலயங்களில் விசேட தேவையுடைய அலகுகளில் உள்ள மாணவர்களின் கற்றல், கற்பித்தல் செயன்முறைகளுக்கு போதுமான பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் குறைவாக உள்ளமையினால் இம்மாணவர்கள் பொருத்தமான கல்வியைப் பெறுவதில் சிரமப்படுகின்றனர்.

**ஆய்வினது முக்கியத்துவம்**

இவ்வாய்வானது விசேட தேவைகளையுடைய அலகுகளைக் கொண்ட தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் உள்ள மாணவர்களை அடிப்படையாகக் கொண்டு ஆய்வு செய்யப்படுகின்றதால் பாடசாலை மட்டத்தில் விசேட தேவையுடைய மாணவர்களுக்கான கல்வியை வழங்குவதில் ஆசிரியர்கள் சரியான முறையில் வகிபங்குகளை நிறைவேற்றுகின்றனரா? என்பது பற்றிய ஒரு மதிப்பீட்டை வழங்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. ஆசிரியர்களினது வகுப்பறை கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளின் போது விசேட தேவையுடைய மாணவர்கள் மீதும் அதிக அக்கறை செலுத்த தூண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதனால் இவ்வாய்வு முக்கியமாக இடம் பெறவேண்டிய ஒன்றாகும்.

ஒரு பாடசாலையின் முழுமையான வெற்றி என்பது சகல மாணவர்களிடத்திலும் அடிப்படை தேர்ச்சியை ஏற்படுத்துவதாகும். எனவே விசேட தேவையுடைய மாணவர்களின் கற்றல் வீழ்ச்சியடையும் போது அது பாடசாலையில் மொத்த அடைவில் தாக்கம் செலுத்தும் என்பதை உணர்ந்து செயற்பட வழிவகுக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. கல்வி உரிமை ஒவ்வொருவரினதும் அடிப்படை உரிமை. எனவே அதனை முழுமையாக நிறைவேற்ற பாடசாலை மட்டத்தில் முழுமையான செயற்பாடுகள் அமைய வேண்டும். என்பதை பாடசாலைகளில் உள்ள ஆசிரியர்கள் உணர்ந்து செயற்பட இவ்வாய்வு முக்கியம்.

விசேட தேவையுடைய மாணவர்களது பெற்றோர்கள் மத்தியில் ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தவும் தங்கள் பிள்ளைகள் மீது அதிக கவனம் செலுத்தவும், பாடசாலையுடனும், தமது பிள்ளைகளுக்கு கற்பிக்கும் ஆசிரியரிடமும் சுமூகமான உறவை ஏற்படுத்தவும், ஆசிரியர்கள் மூலம் பெற்றோர்களுக்கு அறிவூட்டவும் இவ்வாய்வு துணை நிற்கும் என்பதற்காக மேற்கொள்ளப்படுகிறது.

மட்டக்களப்பு மேற்கு மற்றும் கல்குடா கல்வி வலயங்களில் விசேட தேவையுடைய அலகுகளில் உள்ள மாணவர்களின் கற்றல், கற்பித்தல் செயன்முறைகளுக்கு போதுமான பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் குறைவாக உள்ளமையினால் இம்மாணவர்கள் பொருத்தமான கல்வியை பெறுவதில் சிரமப்படுகின்றனர். எனவே ஆசிரியர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவும், எதிர்காலத்தில் இந்த ஆய்வுப்பரப்போடு தொடர்புபட்ட ஆய்வுகளை மேற்கொள்பவர்களுக்கு ஆய்வின் நோக்கத்தை பூரணப்படுத்துவதற்கும், தரவுப் பகுப்பாய்வுகளை மேற்கொள்வதற்கும் உதவும் என்பதற்காக இவ்வாய்வு இடம்பெற்றது.

**இலக்கிய மீளாய்வு**

பொதுவாக சாதாரண மாணவர்களுக்கு தேவைப்படாத விசேட கவனம் மற்றும் குறிப்பிட்ட தேவைகள் அவசியமாக இருக்கும் மாணவர்களை விசேட தேவையுடைய மாணவர்கள் என்பர் (Ebony Howard, 2021).

மேகன் வால் என்பவர் 2018 ஆண்டு விசேட தேவைகள் உள்ள மாணவர்களை பொதுப் பிரிவில் சேர்த்தல் எனும் தலைப்பில் கலிபோர்னியாவின் டொமினிகன் பல்கலைக்கழகத்தில் செய்த ஆய்வில் ஆசிரியர்கள் மாணவர்களை சிறப்புடன் அமைக்க அவர்கள் பல்வேறு கற்பித்தல் உத்திகளை அறிந்திருந்தால் வெற்றி பெற முடியும்.

பிள்ளைகள் ஒரே தன்மையான ஆற்றல், அறிவுடையவர்களாக இருப்பதில்லை. ஒவ்வொரு மாணவரும் பல்வேறுபட்ட கற்றல் தேவையுடையவர்களாக காணப்படுவார்கள். இவர்கள் அனைவரையும் சீரான வழியில் நெறிப்படுத்துவது ஆசிரியரின் பொறுப்பாகும். வகுப்பறையில் மீத்திறன் உடைய மாணவர்கள், மெல்லக் கற்கும் மாணவர்கள், கற்றல் இடர்பாடுடைய மாணவர்கள் வலது குறைந்தோர் எனப் பல வகையான மாணவர்கள் காணப்படுவார்கள். இவர்களின் கற்றல் பாங்கு, ஆற்றல், திறன் போன்றன ஒவ்வொருவருக்கும் வித்தியாசமானதாகும். இவர்கள் கற்றுக் கொள்வதில் வித்தியாசமான கற்றல் தேவையுடையவர்களாக காணப்படுவார்கள் (Anas & Nawastheen, 2019).

ஈவா எஸ். பெக்கர் என்பவர் 2019 ஆண்டு விசேட தேவையுடைய மாணவர்களின் கற்றலில் ஆசிரியர்களின் கற்பித்தலை மேம்படுத்துதல் எனும் தலைப்பில் சுவிற்சர்லாந்தில் செய்த ஆய்வில் விசேட தேவையுடைய குழந்தைகளுக்கான கல்வி வாய்ப்புகள் உலகளவில் மேம்பட்டிருந்தாலும், இந்த மாணவர்களுக்கு கற்பிக்கும் ஆசிரியர்களைத் தயார்படுத்துவது தொடர்பில் குறைபாடுகள் உள்ளன. அதாவது பயிற்சி குறைவான ஆசிரியர்கள், கற்பித்தலுக்கு போதிய வளங்கள் இல்லாமை, போதிய ஆசிரியர்கள் இல்லாமை காரணமாக இம்மாணவர்களுக்கான கற்றல், கற்பித்தலில் சிரமங்கள் ஏற்படுகின்றது.

**ஆய்வு முறையியல்**

ஆய்வு முறையியலானது ஆய்வின் பொது நோக்கத்தையும், சிறப்பு நோக்கங்களையும் அடிப்படையாகக் கொண்டு, ஆய்வு வினாக்கள் தயாரிக்கப்பட்டு அவற்றுக்கு விடை காண்பதன் அடிப்படையில் இப்பகுதி வடிவமைக்கப்பட்டுள்ளது. மற்றும் ஆய்வு பிரதேசம், மாதிரித் தெரிவுப் தரவுப் பகுப்பாய்வு முறை போன்ற பல முக்கிய விடயங்களை கொண்டதாக

அமைகிறது. ஆய்வுப்பிரதேச குடித்தொகையின் அடிப்படையில் நோக்கமாதிரி தெரிவுகள் இதில் இடம்பெறுகின்றன. ஆய்வு வினாக்களுக்கான விடைகளை தேடி அறிவதன் மூலம் பல்வேறு பிரச்சினைகள் கண்டுபிடிக்கப்பட்டு ஆலோசனைகள் முன்வைக்கப்படுகின்றன.

**பொது நோக்கம்**

விசேட தேவையுடைய மாணவர்கள் கற்றலில் எதிர்நோக்கும் பிரச்சினைகளை இனங்காண்பதுடன் அவர்களது கற்றலில் ஆசிரியர்களின் வகிபங்கினை ஆராய்வதாகும்.

**விசேட நோக்கங்கள்**

1. விசேட தேவையுடைய மாணவர்களுக்கு தற்போது நடைமுறையில் உள்ள கற்பித்தல் முறைகளை அறிதல்.
2. விசேட தேவையுடைய மாணவர்களுக்கான கற்பித்தல் முறைகளில் ஆசிரியர்களின் வகிபாகம் எவ்வாறு உள்ளது என்பதை இனங்காணல்.
3. விசேட தேவையுடைய மாணவர்களின் குறைபாடுகளுக்கும், ஆசிரியர்களின் கற்பித்தல் வகிபாகத்திற்கும் இடையிலான தொடர்பினை கண்டறிதல்.
4. விசேட தேவையுடைய மாணவர்களுக்கான பரிகார கற்பித்தலை மேற்கொள்வதில் ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைக் கண்டறிதல்.
5. விசேட தேவையுடைய மாணவர்களின் கற்றலில் ஆசிரியரின் வகிபங்கை அதிகரிப்பதற்கு மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகளையும், ஆலோசனைகளையும் பரிந்துரைத்தல்.

**ஆய்வு பிரதேசம்**

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள 5 கல்வி வலயங்களிலும் விசேட தேவையுடைய மாணவர்களுக்கான அலகுகள் காணப்படுகின்றது. இதில் மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயம் மற்றும் கல்குடா கல்வி வலயம் ஆகிய இரு வலயங்களிலும் உள்ள விசேட தேவையுடைய மாணவர்களுக்கான அலகுகளைக் கொண்ட பாடசாலைகள் ஆய்வாளனின் ஆய்வுப் பிரதேசமாகும்.

**அட்டவணை 3.2.1 மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 5 வலயங்களில் காணப்படும் விசேட தேவையுடைய மாணவர்களுக்கான அலகுகளைக் கொண்ட பாடசாலைகள் பற்றிய விபரம்.**

| கல்வி வலயம் | பாடசாலைகளின் எண்ணிக்கை | | | | ஆசிரியர்களின் எண்ணிக்கை | வி.தே.அலகிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கை | |
|---|---|---|---|---|---|---|---|
| | 1AB | 1C | வகைII | வகைIII | | **ஆண்** | **பெண்** |
| மட்டக்களப்பு | 00 | 05 | 00 | 00 | 10 | 12 | 18 |
| மட்டக்களப்பு | 01 | 02 | 00 | 00 | 06 | 05 | 08 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| மத்தி | | | | | | | |
| மட்டக்களப்பு மேற்கு | 01 | 01 | 01 | 01 | 11 | 23 | 33 |
| பட்டிருப்பு | 01 | 04 | 00 | 00 | 10 | 04 | 08 |
| கல்குடா | 03 | 01 | 01 | 00 | 10 | 13 | 21 |
| மொத்தம் | **22** | | | | **47** | **145** | |

**மூலம் : வலயக் கல்வி அலுவலகம் மட்டக்களப்பு மேற்கு, கல்குடா 2021**

**ஆய்வின் மாதிரித் தெரிவு**

ஆய்வு முறையிலே மாதிரி மிக முக்கியமான முழுக் குடித்தொகை இடமும் ஆய்வினை மேற்கொள்வது இயலாத ஒன்றாகும். அச்சந்தர்ப்பத்திலேயே மாதிரி ஒன்றை தெரிவு செய்யவேண்டும். குடித்தொகையை பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் ஒரு குடித்தொகையில் இருந்து குறிப்பிட்ட உறுப்பினர்கள் ஆய்வில் ஈடுபடுவர். மட்டக்களப்பு மேற்கு மற்றும் கல்குடா கல்வி வலயங்களில் விசேட தேவையுடைய அலகுகளைக் கொண்ட தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்டு விசேட தேவையுடைய மாணவர்களும், அவர்களது பெற்றோர்களும், இம்மாணவர்ளுக்கு கற்பிக்கும் ஆசிரியர்களும், அதிபர்களும் மாதிரிகளாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர். ஆய்விற்காக தரவுகள் சேகரிக்கும் பொருட்டு அடிப்படையாக அமைவது மாதிரி முறையாகும். இங்கு ஆய்வுத் தலைப்புக்கு ஏற்ப தரவுகளை பெறும் பொருட்டு மாதிரி தெரிவு முறை ஒன்றான நோக்க மாதிரிகளின் அடிப்படையில் மாதிரிகள் தெரிவு செய்யப்பட்டுட்டு தரவுகள் பெறப்பட்டுள்ளன.

**அட்டவணை 3.3.1 ஆய்வுக்காக தெரிவு செய்யப்படவுள்ள விசேட வேைவயுடைய மாணவர்களுக்கான அலகுகளைக் கொண்ட பாடசாலைகள் விபரம்**

| இல | மட்டக்களப்பு மேற்கு மற்றும் கல்குடா கல்வி வலயங்களில் விசேட தேவையுடைய அலகுகளை கொண்ட பாடசாலைகள் | வகை | அதிபர் | ஆசிரியர்கள் | | வி.தே.மாண-வர்கள் | | பெற்றோர்கள் | | சே.கா. ஆசிரிய ஆலோசகர்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | மொத்தம் | தெரிவு | மொத்தம் | தெரிவு | மொத்தம் | தெரிவு | |
| 01 | A | II | 01 | 2 | 2 | 15 | 15 | 15 | 15 | |
| 02 | B | 1AB | 01 | 3 | 3 | 17 | 17 | 17 | 17 | 01 |
| 03 | C | 1C | 01 | 3 | 3 | 12 | 12 | 12 | 12 | |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 04 | D | III | 01 | 2 | 2 | 12 | 12 | 12 | 12 | |
| 05 | E | 1AB | 01 | 2 | 2 | 8 | 8 | 8 | 8 | 01 |
| 06 | F | 1C | 01 | 2 | 2 | 7 | 7 | 7 | 7 | |
| 07 | G | II | 01 | 2 | 2 | 9 | 9 | 9 | 9 | |
| 08 | H | 1AB | 01 | 2 | 2 | 6 | 6 | 6 | 6 | |
| 09 | I | 1AB | 01 | 2 | 2 | 4 | 4 | 4 | 4 | |
| | மொத்த மாதிரிகளின் எண்ணிக்கை | 09 | 09 | 20 | 20 | 90 | 90 | 90 | 90 | 02 |

**மூலம் : மட்டக்களப்பு மேற்கு மற்றும் கல்குடா கல்வி வலய திட்டமிடல் பிரிவு 2020.**


ஆய்வுக்காக தெரிவு செய்யப்பட்ட 09 விசேட தேவையுடைய அலகுகளைக் கொண்ட பாடசாலைகளில் உள்ள 09 அதிபர்களும் நோக்க மாதிரியின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டனர். இவ் 09 பாடசாலைகளில் உள்ள விசேட தேவையுடைய மாணவர்களுக்கு கற்பிக்கும் 20 ஆசிரியர்களும், 02 சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்களும், இவ் 09 பாடசாலைகளில் இனங்காணப்பட்ட விசேட தேவையுடைய மாணவர்கள் 90 பேரும் தெரிவு செய்யப்பட்டனர். இவ் 09 பாடசாலைகளில் நோக்க மாதிரியில் இனங்காணப்பட்ட விசேட தேவையுடைய மாணவர்களது 90 பெற்றோர்கள் நோக்க மாதிரி அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டனர்.

**தரவுப்பகுப்பாய்வும் வியாக்கியானமும், கலந்துரையாடலும்**

தகவல்கள் அனைத்தும் அட்டவணைகள், வரைபடங்களை பயன்படுத்தி அளவு சார்ந்த மற்றும் பண்பு சார்ந்த கலப்பு அடிப்படையில் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. ஆசிரியர்களிடம் இருந்து வினாக்கொத்துக்கள் மூலம் பெறப்பட்ட தரவுகளே பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டன. ஆய்வு வினாக்களுக்கு விடை காணும் வகையில் 20 ஆசிரியர்களும், 09 அதிபர்களும், 02 ஆசிரிய ஆலோசகர்களும், 90 பெற்றோர்களும், 90 மாணவர்களும் மாதிரிகளாக குறித்த விசேட அலகுகளைக் கொண்ட பாடசாலைகளில் இருந்து தெரிவு செய்யப்பட்டனர். இப்பகுதியானது ஆய்வு பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில் பெறப்பட்ட தரவுகள் விரிவாக வியாக்கியானம் மற்றும் கலந்துரையாடலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

***விசேட தேவையுடைய மாணவர்களுக்கு தற்போது நடைமுறையில் உள்ள கற்பித்தல் முறைகளை இனங்காணல்.***

உரு 01 விசேட தேவையுடைய மாணவர்களின் வகைப்பாடுகள்





விசேட தேவையுடைய மாணவர்களுக்கான அலகுகளில் காணப்படும் மாணவர்களின் வகைப்பாடுகளாக மன வளர்ச்சிக் குறைபாடுடைய மாணவர்கள் 40% ஆகவும், உடல்சார் குறைபாடுடைய மாணவர்கள் 20% ஆகவும், செவிப்புலக் குறைபாடுடைய மாணவர்கள் 15% ஆகவும், பேச்சுத் திறன் குறைபாடு மாணவர்கள் 15% ஆகவும், கற்றல் குறைபாடுடைய மாணவர்கள் 10% ஆகவும் காணப்படுகின்றனர். எனவே பகுப்பாய்வின்படி இந்த விசேட அலகுகளில் மனவளர்ச்சிக் குறைபாடுடைய மாணவர்களே அதிகமாக காணப்படுகின்றனர்.

பொதுவாக சாதாரண மாணவர்களுக்கு தேவைப்படாத விசேட கவனம் மற்றும் குறிப்பிட்ட தேவைகள் அவசியமாக இருக்கும் மாணவர்களை விசேட தேவையுடைய மாணவர்கள் என்பர் (Ebony Howard, 2021).

பிள்ளைகள் ஒரே தன்மையான ஆற்றல், அறிவுடையவர்களாக இருப்பதில்லை. ஒவ்வொரு மாணவரும் பல்வேறுபட்ட கற்றல் தேவையுடையவர்களாக காணப்படுவார்கள். இவர்கள் அனைவரையும் சீரான வழியில் நெறிப்படுத்துவது ஆசிரியரின் பொறுப்பாகும். வகுப்பறையில், கற்றல் இடர்பாடுடைய மாணவர்கள், வலது குறைந்தோர் எனப் பல வகையான மாணவர்கள் காணப்படுவார்கள். இவர்களின் கற்றல் பாங்கு, ஆற்றல், திறன் போன்றன ஒவ்வொருவருக்கும் வித்தியாசமானதாகும். இவர்கள் கற்றுக் கொள்வதில் வித்தியாசமான கற்றல் தேவையுடையவர்களாக காணப்படுவார்கள் (Anas & Nawastheen, 2019). எனவே மாணவர்களின் விசேட தேவைகளை கண்டறிய வேண்டும். அதன் பின்னர் ஒவ்வொரு விசேட தேவைக்கும் ஏற்ப கற்பித்தல் முறையை மாற்றியமைக்க வேண்டும்.

***விசேட தேவையுடைய மாணவர்களின் தனியாள் வேறுபாடுகளுக்கு ஆசிரியர்கள் பயன்படுத்தும் கற்பித்தல் முறைகளின் பொருத்தப்பாடு***




உரு 02 தனியாள் வேறுபாடுகளும் கற்பித்தல் முறைகளும்.

விசேட தேவையுடைய மாணவர்களின் தனியாள் வேறுபாடுகளுக்கு ஆசிரியர்கள் பயன்படுத்தும் கற்பித்தல் முறைகளின் பொருத்தப்பாடு தொடர்பாக பெறப்பட்ட தரவுகளின் பகுப்பாய்வு அடிப்படையில் செவிப்புல குறைபாட்டுக்கு தனியாள் முறை பொருத்தம் என 20% ஆன ஆசிரியர்களும், சைகை முறை பொருத்தம் என 20% ஆன ஆசிரியர்களும், விளையாட்டு முறை பொருத்தம் என 30% ஆன ஆசிரியர்களும், குழு முறை பொருத்தம் என 10% ஆன ஆசிரியர்களும், செயற்பாட்டு முறை பொருத்தம் என 20% ஆன ஆசிரியர்களும் பதில்களை வழங்கியுள்ளனர்.


மன வளர்ச்சி குறைபாட்டுக்கு தனியாள் முறை பொருத்தம் என 30% ஆன ஆசிரியர்களும், விளையாட்டு முறை பொருத்தம் என 20% ஆன ஆசிரியர்களும், குழு முறை பொருத்தம் என 20% ஆன ஆசிரியர்களும், செயற்பாட்டு முறை பொருத்தம் என 20% ஆசிரியர்களும், பாத்திரம் ஏற்று நடித்தல் முறை பொருத்தம் என 10% ஆன ஆசிரியர்களும் பதில்களை வழங்கியுள்ளனர்.

Uzunboylu,H. & Özcan,D. என்பவர்கள் 2019 ஆண்டு விசேட தேவையுடைய மாணவர்களுக்கான கற்பித்தல் முறைகளின் பகுப்பாய்வு எனும் தலைப்பில் துருக்கியில் செய்த ஆய்வில் விசேட கல்வியில் கற்பித்தல் முறைகள் தொடர்பாக ஆசிரியர்கள் ஒரு வழிகாட்டுதலை வழங்க வேண்டும். இதில் ஆசிரியர் முதலில் மாணவர்களின் குறைபாடுகளை கண்டறிய வேண்டும். அதன் பின்னர் குறைபாடுகளுக்கு ஏற்ப கற்பித்தலை மேற்கொள்ள வேண்டும்.

மேற்கூறிய ஆய்வு முடிவுடன் ஒப்பிடும் போது விசேட தேவையுடைய மாணவர்களின் கற்றலில் ஆசிரியரின் கற்பித்தல் முறைகள் பற்றி பெறப்பட்ட முடிவுகள் ஆய்வாளன் இந்த ஆய்வு முடிவை உறுதிப்படுத்துவதாக அமைகிறது.

***விசேட தேவையுடைய மாணவர்களுக்கான கற்பித்தல் முறைகளில் ஆசிரியர்களின் வகிபாகம் எவ்வாறு உள்ளது என்பதை அறிதல்.***

உரு 03 ஆசிரியரின் வினைத்திறனான வகிபாகங்கள்




**உரு 4.3 ஆசிரியரின் வினைத்திறனான வகிபாகங்கள்**


கருத்துக்கள்

விசேட தேவையுடைய மாணவர்களுக்கு கற்பிக்கும் போது ஆசிரியரின் வினைத்திறனான வகிபாகங்கள் தொடர்பாக வினாவப்பட்ட போது கிடைக்கப்பெற்ற பதில்களின் பகுப்பாய்வின் படி ஆசிரியர் - பெற்றோர் தொடர்பு 20% ஆன ஆசிரியர்கள் மிகநன்று என்றும், 10% ஆன ஆசிரியர்கள் நன்று என்றும், சுமார் 10% ஆன ஆசிரியர்கள் சராசரி என்றும், 60% ஆன ஆசிரியர்கள் குறைவு என்றும் பதிலளித்தனர். எனவே பகுப்பாய்வின் படி ஆசிரியர் - பெற்றோர் தொடர்பு குறைவாகவே உள்ளது. பொதுவாக மாணவர்களின் கற்றல், கற்பித்தலில் ஆசிரியர் - பெற்றோர் தொடர்பு மிக முக்கியமான ஒன்றாகும். அதிலும் விசேட தேவையுடைய மாணவர்களின் கற்றலில் ஆசிரியர் - பெற்றோர் தொடர்பு மிக முக்கியமான ஒன்றாகும். பிள்ளையின் முழுமையான முன்னேற்றத்திற்கு ஆசிரியரும் பெற்றோரும் இணைந்து செயற்பட வேண்டும். ஆசிரியர் பெற்றோர் ஊடாக பிள்ளையின் இயல்புகளை விளங்கிக்கொண்டால் தான் கற்றல், கற்பித்தலை சிறப்பாக மேற்கொள்ள முடியும்.

கேட்டல், பேசுதல், வாசித்தல், எழுதுதல் ஆகிய நான்கு மொழி திறன்களும் வீட்டில் இருந்தே ஆரம்பமாவதால் பிள்ளைகளின் மொழித்திறன் விருத்தியில் பெற்றோரின் வகிபங்கு அளப்பெரியது பிள்ளைகளது கற்றலுக்கான ஆர்வத்தையும் நாட்டத்தையும் உருவாக்குவதும் பேணுவதும் பெற்றோரினதும், ஆசிரியர்களினதும் முக்கிய கடமையாகின்றன.

மேற்கூறிய ஆய்வு முடிவுடன் விசேட தேவையுடைய மாணவர்களின் பெற்றோர் பிள்ளைகளின் கற்றல் குறைபாடுகளை விளங்கிக்கொள்தல் என்னும் விடயத்தில் காணப்பட்ட முடிவுகள் ஆய்வாளன் இந்த ஆய்வை மேலும் முன்னகர்த்தி செல்வதற்கும், ஆய்வாளன் ஆய்வு முடிவை குறிப்பிடலாம்.

***விசேட தேவையுடைய மாணவர்களின் செயற்பாடுகளுக்கும் ஆசிரியரின் கற்பித்தல் வகிபாகத்திற்கும் இடையிலான தொடர்புகள்***




உரு 04 மாணவர்களின் செயற்பாடுகள் மற்றும் ஆசிரியரின் வகிபாகம்

விசேட தேவையுடைய மாணவர்களின் செயற்பாடுகளில் சுய கற்றல் தொடர்பாக ஆசிரியர்களிடம் கேட்கப்பட்ட வினாவுக்கு 10% ஆன ஆசிரியர்கள் மிகநன்று என்றும், 10% ஆன ஆசிரியர்கள் நன்று என்றும், சுமார் 10% ஆன ஆசிரியர்கள் சராசரி என்றும், 70% ஆன ஆசிரியர்கள் குறைவு என்றும் பதிலளித்தனர்.


இதனால் கூடுதலாக விசேட தேவையுடைய மாணவர்கள் தானாகவே சுய கற்றலில் ஈடுபடுவது குறைவு. இவர்கள் இன்னொருவரின் தூண்டுதலினாலே கற்க ஆரம்பிக்கின்றனர் என்ற முடிவுக்கு வர முடியும். குறைவு, மிகக்குறைவு என பதிலளித்தவர்கள் கூறிய காரணங்களாக, இவர்களுக்கு ஆசிரியரின் உதவி தேவை, அடிப்படை எழுத்தறிவு தெரியாது, அவர்களுக்கான அன்பு, காப்புத் தேவைகள் அதிகம் தேவை எனக்கூறினர். எனவே ஒரு ஆசிரியர் அல்லது பெற்றோர் இவர்களை வழிப்படுத்தினால் இவர்களின் கற்றலை மேம்படுத்த முடியும்.

ஆனால் உபுள் இந்திக்க, 2011 ஆண்டு செய்த ஆய்வின் முடிவுகளில் விசேட தேவையுடைய மாணவர்கள் தாழ்வு மனப்பாங்குடையவர்கள், சுயமாக செயற்பட முடியாதவர்கள் எனக் கூறுகிறது. மேற்கூறிய ஆய்விலும் விசேட தேவையுடைய மாணவர்கள்

சுயமாக கற்றலில் ஈடுபட முடியாதவர்கள் என கூறப்பட்டுள்ளது. இதன்படி ஆய்வாளனின் ஆய்வுடன் இந்த ஆய்வு முடிவுகள் ஒத்துப் போகின்றது.

மாணவர்களது வாழ்க்கையில் சகபாடிகளின் பங்களிப்பு பலமான விடயமாக அமைகின்றது தம்மை ஒத்த வயது குழுவினருடன் சேர்த்து நட்பு கொள்வதன் ஊடாக மகிழ்ச்சியும் சுதந்திர உணர்வும் அதிகரிக்கின்றது வகுப்பறையில் சகபாடிகள் உடன் இணைந்து கற்கவும் சகபாடிகள் மூலம் கற்றுக் கொள்ளவும் வாய்ப்பு அதிகரிக்கும் போது கற்றல் பலமடைகின்றது. இம்மாணவர்களை அவதானித்த போது கூடுதலான மாணவர்கள் சகபாடிக்குழுக்களோடு இணைந்தே தமது செயற்பாடுகளை செய்கின்றனர்.

***விசேட தேவையுடைய மாணவர்களுக்கான பரிகார கற்பித்தலை மேற்கொள்வதில் ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை கண்டறிதல்***




கருத்துக்கள்


உரு 05 விசேட தேவையுடைய மாணவர்களுக்கு கற்றல், கற்பித்தலுக்கான போதிய வளங்கள்

விசேட தேவையுடைய மாணவர்களுக்கு கற்றல், கற்பித்தலுக்கான போதிய வளங்கள் உள்ளனவா? என்பது தொடர்பாக கேட்கப்பட்ட போது கிடைக்கப்பெற்ற பதில்களின் பகுப்பாய்வின் படி 10% ஆன ஆசிரியர்கள் அதிகம் என்றும், 10% ஆன ஆசிரியர்கள் ஓரளவு என்றும், சுமார் 20% ஆன ஆசிரியர்கள் மிகக் குறைவு என்றும், 60% ஆன ஆசிரியர்கள் குறைவு என்றும் பதிலளித்தனர். பகுப்பாய்வின் படி விசேட தேவையுடைய மாணவர்களுக்கு கற்றல், கற்பித்தலுக்கான போதிய வளங்கள் குறைவாகவே உள்ளது. எனவே இம்மாணவர்களுக்கு கற்பிப்பதற்கான போதிய வளங்கள் காணப்பட வேண்டும். இதன் அடிப்படையில் அதிபர்களுடன் இது தொடர்பாக கலந்துரையாடியதன் பிரகாரம் 50% ஆன அதிபர்கள் எதிர்காலத்தில் விசேட தேவையுடைய மாணவர்களுக்கான மிகப் பொருத்தமான வகுப்பறைச் சூழலை உருவாக்கவுள்ளதாகவும் தெரிவித்தனர்.

ஆனால் பக்கீர் ஜ∴பர், என்பவர்கள் 2004 ஆண்டு மேற்கொண்ட ஆய்வின் பிரகாரம் விசேட தேவையுடைய மாணவர்களுக்கான வகுப்பறைச் சூழல் சிறந்த முறையில் ஒழுங்கமைக்கப்பட வேண்டும் என்பதை குறிப்பிட்டுள்ளார். அந்த ஆய்விலும் வகுப்பறைச்

சூழல், பௌதீக சூழல், உளவியல் சூழல் என்பன சிறப்பாக அமையும் போதுதான் விசேட தேவையுடைய மாணவர்கள் சிறப்பாக கற்றலை மேற்கொள்வார்கள் என கூறப்பட்டுள்ளது.

***விசேட தேவையுடைய மாணவர்களின் கற்றலில் ஆசிரியர்களின் வகிபங்கை அதிகரிப்பதற்கு மேற்கொள்ளக் கூடிய நடவடிக்கைகளையும், ஆலோசனைகளையும் பரிந்துரைத்தல்.***




உரு 06 அதிபரின் பங்களிப்பு

விசேட தேவையுடைய மாணவர்களின் கற்றல், கற்பித்தலில் ஆசிரியரின் வகிபங்கை அதிகரிப்பதற்கு அதிபரின் செயற்பாடு தொடர்பாக வினவப்பட்ட போது கிடைக்கப்பெற்ற பதில்களின் பகுப்பாய்வின் படி 20% ஆன ஆசிரியர்கள் மிக அதிகமாக என்றும், 10% ஆன ஆசிரியர்கள் அதிகம் என்றும், 10% ஆன ஆசிரியர்கள் ஓரளவு என்றும், சுமார் 20% ஆன ஆசிரியர்கள் மிகக் குறைவு என்றும், 40% ஆன ஆசிரியர்கள் குறைவு என்றும் பதிலளித்தனர்.

பாடசாலைகளின் இயக்கத்திற்கும் சமூக எதிர்பார்ப்பிற்கும் ஏற்ப மாணவர்களை உருவாக்குவதில் பாடசாலை சார் அதிபரின் முகாமைத்துவம் பணி மிகவும் இன்றியமையாதது விசேட தேவைகொண்டவர்களது கற்றல் மேம்பாட்டிற்கு அதிபரின் ஒத்துழைப்பு அவசியம். பௌதீக வளங்கள், செயற்பாட்டு அறைகள், நவீன கட்புல செவிப்புல சாதனங்கள் மற்றும் ஏனைய செயற்பாடுகள், மேலதிக கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகளைத் திட்டமிட்டு வழங்கி விசேட தேவை கொண்ட மாணவர்களது அடிப்படைத் தேர்ச்சி மட்டத்தை உயர்த்துவதற்கு அதிபர்களது முகாமைத்துவத் திறன் அவசியமானதொன்று.

ஆகவே மேற்கூறிய ஆய்வு முடிவுடன் வகுப்பறை கற்றல், கற்பித்தல் செயற்பாட்டில் மேற்பார்வை அவசியம் என்பதை காட்டுகிறது. இதனால் இவ்வாய்வை முன்னகர்த்திச் செல்வதற்கு உறுதுணையாக அமைகிறது.

**முடிவுகளும், விதப்புரைகளும்**

***விசேட தேவையுடைய மாணவர்களுக்கு தற்போது நடைமுறையில் உள்ள கற்பித்தல் முறைகள்***

1. ஆய்வுக்குட்படுத்திய விசேட அலகுகளில் 40% ஆன மனவளர்ச்சி குறைபாடுடைய மாணவர்களும், 20% ஆன உடல்சார் குறைபாடுடைய மாணவர்களும், 15% ஆன

செவிப்புலக் குறைபாடுடைய மாணவர்களும், 15% ஆன பேச்சுத் திறன் குறைபாடுடைய மாணவர்களும், 10% ஆன கற்றல் குறைபாடுடைய மாணவர்களும் காணப்படுகின்றனர்.

2. குறித்த விசேட அலகுகளில் நவீன தொழினுட்ப சாதனங்கள் குறைவாக காணப்படுகின்றமையால் 80% ஆன ஆசிரியர்கள் நவீன தொழினுட்பத்தை பயன்படுத்தி கற்பிப்பது குறைவாக உள்ளது.

3. ஆய்வுக்குட்படுத்திய விசேட அலகுகளில் பாத்திரம் ஏற்று நடித்தல் கற்பித்தல் முறை நடாத்தப்படுவது குறைவாக காணப்படுகிறது.

**விதப்புரைகள்**

1. விசேட தேவையுடைய மாணவர்களது தேவைகளுக்கு ஏற்ப கற்பித்தல் முறைகளை பயன்படுத்த வேண்டும். இதற்கு முதலில் ஆசிரியர் மாணவர்களின் தனியாள் வேறுபாடுகளை கண்டு பிடிக்க வேண்டும்.

2. சைகை முறைக் கற்பித்தல், விளையாட்டு முறைக் கற்பித்தல், செயற்பாட்டு முறைக் கற்பித்தல், தனியாள் முறைக் கற்பித்தல், நவீன தொழினுட்ப பயன்பன்பாட்டின் ஊடான கற்பித்தல், முறைக் கற்பித்தல், குழு முறைக் கற்பித்தல், IEP முறைக் கற்பித்தல் போன்ற கற்பித்தல் முறைகளை ஒவ்வொரு விசேட தேவையுடைய மாணவர்களின் விசேட தன்மைக்கு ஏற்ப கற்பிக்க வேண்டும்.

***விசேட தேவையுடைய மாணவர்களுக்கான கற்பித்தல் முறைகளில் ஆசிரியர்களின் வகிபாகம் எவ்வாறு உள்ளது என்பதை அறிதல்.***

1. ஆய்வுக்குட்படுத்திய பாடசாலைகளில் பல்வேறு வகையான விசேட தேவையுடைய மாணவர்கள் காணப்படுகின்றமையால் ஆசிரியர்களுக்கு இம்மாணவர்களது கற்றல், கற்பித்தலை சிறப்பாக மேற்கொள்வது சவால்மிக்கதாக காணப்படுகிறது.

2. ஆசிரியர்கள் கதை கூறல், சைகைமொழி, நடித்துக்காட்டுதல் போன்ற பல முறைகள் மூலம் இம்மாணவர்களுக்கு தகவல்களை கடத்த முயன்றாலும் அதிகபடியான மாணவர்கள் பயனடைவது குறைவாக உள்ளது.

3. பல்வேறு வகையான விசேட தேவையுடைய மாணவர்கள் காணப்படுதல், மாணவர்கள் செயற்பாடு இன்றி செவிமடுப்பவர்களாகவே காணப்படுகின்றனர். இவ்வாறான காரணங்களால் இம்மாணவர்களுக்கு கற்பிக்கும் போது ஆசிரியர்கள் கடத்தல் வகிபாகத்தை நிறைவேற்றுவது குறைகின்றது.

**விதப்புரைகள்**

1. விசேட தேவையுடைய மாணவர்களின் பல்வகைமைக்கு ஏற்ப ஆசிரியர்கள் தங்கள் கற்பித்தல் வகிபாகங்களை மாற்றியமைக்க வேண்டும். அதாவது பாட விடயங்களை கதைகளாக கூறுதல் மூலமும், சில வீடியோ காட்சிகள் மூலமும், ஓடியோ காட்சிகள் மூலம் இம்மாணவர்களுக்கு இலகுவான மொழிநடையில் கற்பித்தலை மேற்கொள்ள வேண்டும்.

2. மாணவர்களிடம் ஆசிரியர்கள் சிறப்பான தொடர்பாடலை ஏற்படுத்த வேண்டும். அதாவது செவிப்புலக் குறைபாடுடைய மாணவர்களுக்கு ஆசிரியர் சைகை மொழி ஊடாக தகவல்களை வழங்கலாம். இதில் ஆசிரியர்களின் உதட்டசைவுகளை பார்த்து மாணவர்கள் விளங்கிக்கொள்ளக்கூடிய முறையில் தகவல்களை கடத்த வேண்டும்.

3. இம்மாணவர்களுடன் ஆசிரியர்கள் கலந்துரையாட வேண்டும். மேலும் பாட உள்ளடக்கத்தை கட்டி எழுப்பும் போது எளியவற்றில் இருந்து சிக்கலானவற்றிற்கும், அறிந்தவற்றில் இருந்து அறியாதவற்றிற்கும் மாணவர்களை கொண்டு செல்ல வேண்டும்.

***விசேட தேவையுடைய மாணவர்களுக்கான பரிகார கற்பித்தலை மேற்கொள்வதில் ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை கண்டறிதல்***

**மாணவர்களுக்கு கற்றல், கற்பித்தலுக்கான போதிய வளங்கள்**

**முடிவுகள்**

1. ஆய்வுக்குட்படுத்திய பாடசாலைகளில் 80% ஆன விசேட தேவையுடைய மாணவர்களுக்கு கற்றல், கற்பித்தலுக்கான போதிய வளங்கள் குறைவாகவே உள்ளது.

2. வகுப்பில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப தளபாட வசதிகள் குறைவாக உள்ளதுடன் கூடிய உயரமுடைய மாணவர்களுக்கும், குறைந்த உயரமுடைய மாணவர்களுக்கும் ஏற்ப கதிரை, மேசையின் ஒழுங்கமைப்பு குறைவாக காணப்படுகின்றது.

3. இப்பாடசாலைகள் கஸ்ட, அதிகஸ்ட பாடசாலைகளாக அமைந்துள்ளமையால் போதிய வளங்களை பெறுவதும் சிரமமானதாக காணப்படுகின்றது.

**விதப்புரைகள்**

1. விசேட தேவையுடைய மாணவர்களுக்கு ஏற்ப வகுப்பறைச் சூழல் பொருத்தமான வளங்களை கொண்டதாக மாற்றியமைக்க வேண்டும். அதற்கு பாடசாலையின் உதவியுடன் பெற்றோர், கல்வி அதிகாரிகளின் உதவிகளைப்பெற வழிவகுத்தல்

அவசியம் ஆகும். இம்மாணவர்கள் கற்கக்கூடிய அளவுக்கு வகுப்பறைகளை ஒழுங்கமைத்துக் கொடுப்பதற்கு பாடசாலை நிர்வாகத்தினரும், பெற்றோரும் ஒத்துழைப்புடன் செயற்பட வேண்டும்.

2. வகுப்பறையின் பருமனுக்கு ஏற்ப மாணவர்களின் எண்ணிக்கையை பேணுவதுடன் தேவையற்ற பொருட்களை அப்புறப்படுத்தப்படுத்தல் பொருத்தமான தளபாட வசதிகளை ஏற்படுத்தி அவர்களது தேவைக்கு ஏற்ப அமைத்தல். இதற்கு பெற்றோர் அரச சார்பற்ற நிறுவனங்கள் உதவியைப் பெறலாம்.

3. 2006,10,17 மற்றும் 1467/15 இலக்கத்தை கொண்ட குறைபாடுகள் உள்ளவர்களின் உரிமை பாதுகாக்கப்படும் சட்டத்தின் கீழ் சமூக சேவைகள் மற்றும் சமூக நலன்புரி அமைச்சினால் வெளியிடப்பட்ட 2006/01 ஆம் இலக்கம் கொண்ட குறைபாடுகள் உள்ளவர்கள் தொடர்பான கட்டளைகளை அமுல்படுத்துவதற்காக கல்விச் செயலாளரினால் வெளியிடப்பட்ட இலக்கம் 7006/09 மற்றும் 2007.05.14 ஆம் திகதி சுற்றறிக்கையின் பிரகாரம் சகல பாடசாலைகளுக்கும் பிரவேச வழிகள், நூலகம், விளையாட்டு மைதானம், ஆய்வுக்கூடங்கள், சுகாதாரமையங்கள் போன்ற இடங்களுக்கான பிரவேச வழிகளை ஏற்படுத்துவது பாடசாலையின் கட்டிட பொறியியலாளர், அதிபர், கல்வி அதிகாரிகளின் பொறுப்பாகும்.

***மாணவர்களின் கற்றல், கற்பித்தலில் ஆசிரியர்களின் வகிபங்கை அதிகரிப்பதற்கு அதிபரின் செயற்பாடு***

**முடிவுகள்**

1. விசேட கல்வி அலகுகளில் கற்பிக்கும் ஆசிரியர்களுடன் பெற்றோர் ஒத்துழைத்து செயற்படுவது குறைவாக உள்ளமையால் அதிபர்களுக்கு ஆசிரியர்களின் பங்களிப்பை அதிகரிக்கச் செய்வது சவால்மிக்கதாக உள்ளது.

2. ஆசிரியர் பற்றாக்குறை உள்ளதால் ஆசிரியர்கள் சுதந்திரமாக கற்றல், கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபடுவது குறைவாக உள்ளதுடன் அதிபர்களுக்கு போதிய பயிற்சி பெற்ற ஆசிரியர்களை பெற்றுக்கொள்வது சவால்மிக்கதாக உள்ளது.

**விதப்புரைகள்**

1. ஒவ்வொரு பாடசாலை அதிபர்களது பங்களிப்பு அப்பாடசாலைகளின் வளர்ச்சிக்கு இன்றியமையாதது. எனவே விசேட தேவையுடைய மாணவர்களின் செயற்பாடுகளுக்கு அவர்களது பங்களிப்பை கட்டாயமாக்க வேண்டும். விசேட தேவையுடைய மாணவர்களுக்கு பல்வேறு தேவைப்பாடுகள் இருக்கும் அவற்றை அதிபர் பூர்த்தி செய்தல் வேண்டும். தேவைப்படும் வளங்களை பாடசாலை, குடும்பம், சமூகம், அமைப்புக்கள், நிறுவனங்கள் மற்றும் ஆலயங்கள் ஊடாக பெற்று பயன்படுத்த வழியமைத்தல் வேண்டும். இதில் அதிபரின் பங்களிப்பே பிரதானமானதாகும்.

2. கல்விச் செயலாளரின் இலக்கம் 17/2014 மற்றும் 2014.05.23 ஆம் திகதி சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விசேட கல்வி அலகுகளில் முழுநேர சேவையில் ஈடுபட்டுள்ள விசேட கல்வி ஆசிரியர்களுக்கு 10% ஆன கொடுப்பனவு பற்றி தெளிவுபடுத்தல்

3. சகல விசேட கல்வி அலகிலும் ஆசிரியர்கள் வகுப்பறையில் மாணவர்களுக்கு உதவிகளை வழங்கவும், கற்பித்தலில் ஈடுபடும் ஆசிரியர்கள், பயண ஆசிரியர்களின் செயற்பாடுகள் உள்ளக மற்றும் வெளியக மேற்பார்வைக்கு உள்ளாக்கப்பட வேண்டும். அதற்கு மேலதிகமாக விசேட கல்வி அலகினுள் பின்வரும் அத்தியாவசிய ஆவணங்கள் இற்றைப்படுத்தப்பட்டு பராமரிக்கப்படல் வேண்டும். அந்த கோவைகள் மற்றும் மதிப்பீட்டு அறிக்கைகள் அதிபரினால் மேற்பார்வை செய்து வசதிகள் வழங்கப்பட்டு விசேட கல்வி அலகில் பாடசாலைக் கட்டமைப்புக்குரிய அலகாக பேணப்பட வேண்டும்.

**உசாத்துணைகள்**

அருள்மொழி, செ. (2016). *கல்வி ஆய்வு முறை.* எவகிறீன் அச்சகம் மட்டக்களப்பு.

சிவகுமார், த. (2009). *விசேட கல்வி அறிமுகமும் பிரயோகங்களும்.* குரு பிறிண்டர்ஸ்.

ஜ.ஃபர் ப. (2004). *வெற்றிகரமான கற்பித்தல் வகுப்பறை முகாமைத்துவம்.* செலெக்சன் ஒப்செட் அக்கரைப்பற்று.

Anas, P. L., Nawastheen, F. M. (2019). Teachers' perception towards in fulfilling diverse learners needs in the classroom teaching-learning process. *South Eastern University International Arts Research Symposium*. http://ir.lib.seu.ac.lk/handle/123456789/4170

Desforges, C., & Abouchaar, A. (2003). The impact of parental involvement, parental support and family education on pupil achievemet, (No. 433). Nottingham, England: DfES. http://relationalschools.org/2017/08/12.

Mohaned Ghazi Abed. (2018). Teachers' Perspectives Surrounding ICT Use amongst SEN Students in the Mainstream Educational Settin. *World Journal of Education*. http://wje.sciedupress.com.

Megan Walsh, (2018). The Inclusion of Students with Special Needs in the General Education Classroom. Dominican University of California. https://doi.org/10.33015/dominican.edu/2018.EDU.ST.01

Shazny, S. H. M. (2021). Challenges faced by students with special needs and learning opportunities for them. *Muallim Journal of Social Sciences and Humanities*, *5(*1), 74-83. https://doi.org/10.33306/mjssh/113.

Uzunboylu, H., Özcan, D. (2019). Teaching methods used in special education: A content analysis study. *International Journal of Cognitive Research in Science, Engineering and Education (IJCRSEE)*, 7(2), 99-107.